

# விக்கிப்பீடியா

செயற்றிட்ட முன்வரைவு: தமிழ் விக்கிப்பீடியர்கள் சார்பாக கலந்துரையாடித் தொகுத்தவர்கள்: தகவல் உழவன், மணியன், தினேசுக்குமார், சண்முகம், அ. இரவிசங்கர், சுந்தர், பார்வதி, சிபி

# இது வரை

- 2010 - தமிழ்நாடு அரசு ஆதரவில் மாநிலம் தழுவிய கட்டுரைப் போட்டி.
- 2010 - த. இ. க. கலைச்சொல் அகரமுதலி கொடை. 1,50,000+ சொற்கள் விக்சனரியில் ஏற்றம். இன்று இந்தியாவின் முன்னணி விக்சனரி.
- 2013 - 20 தொகுதிகள் கலைக்களஞ்சியம் கொடை
- 2006 - இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகளை வைத்து தானியங்கிக் கட்டுரைகள்.

# ஒருங்கிணைந்த செயற்பாட்டுப் புலங்கள்

- கட்டற்ற உரிமங்களுக்கான கொள்கை முன்னெடுப்புகள்.
- உட்கட்டமைப்பு ஆதரவு
- திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்
- காட்சியகங்கள், நூலகங்கள், ஆவணக் காப்பகங்கள், அருங்காட்சியகங்கள் (GLAM) எண்மியமாக்கம்.
- உள்ளடக்க மேம்பாடு - தரவு வழி தானியங்கிக் கட்டுரைகள், போட்டிகள், குடிமைச் சமூக ஒருங்கிணைப்பு முன்னெடுப்புகள்
- தரவுத் திறப்பு
- பரப்புரை - பள்ளி, கல்லூரி, அரசுத் துறை மூலமாக
- அடிப்படைக் கல்வி - தமிழ்த் தட்டச்சுப் பயிற்சி, பாடத்திட்டத்தில் விக்கிப்பீடியா

# யார் பங்கேற்கிறார்கள்?

- தமிழ் விக்கிப்பீடியர் சமூகம்
- ஒப்பந்தப் பணியாக உறைவிட விக்கிப்பீடியர்கள்
- அரசுப் பணியில் உள்ள விக்கிப்பீடியர்களுக்கு முழு நேரப் பொறுப்பு அளித்தல்
- தமிழ்நாடு கட்டற்ற மென்பொருள் அறக்கட்டளை
- பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள ஆர்வலர்கள்
- விக்கிமீடியா இந்தியா

# முதற்கட்டத் திட்டங்கள்

- தமிழ்நாடு மின்னாளுகை முன்னெடுப்பின் வழி தரவுகளைப் பெற்று கட்டுரை ஆக்கம்.
- ஆழி. செந்தில்நாதன் ஒருங்கிணைப்பில் குடிமைச் சமூக அறிஞர்களைக் கொண்டு துறை சார் கட்டுரைகள் ஆக்கம்.
- திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் - விக்கிப்பீடியர்களுக்கான பல்வேறு திறன் பயிற்சிகள், பயிற்றுநர்களுக்கான பயிற்சிகள், கணித்தமிழ் பேரவையினருக்கான பயிற்சிகள்.
- பயிற்சி வளங்கள் உருவாக்கல் - நிகழ்பட உதவிக் குறிப்புகள், பயிற்சி ஏடுகள் உருவாக்கம்.
- கட்டற்ற அறிவு முனையம் - இச்செயற்பாடுகளுக்கான களமாக, த. இ. க. வின் அடிப்படைச் செயற்பாடாக இம்முனைப்புகள் மாற, தொடர.
- மாவட்ட அளவிலான கணித்தமிழ், கட்டற்ற மென்பொருள், விக்கியூடகப் பரப்புரை
- உள்ளடக்க மேம்பாட்டுக்கான போட்டிகள்
- கல்வியில் விக்கிப்பீடியா

# எதிர்பார்ப்புகள் / எல்லைகள்

- கட்டற்ற உரிமங்கள் ஓர் அடிப்படைத் தேவை
- விக்கிபீடியர் சமூகத்தின் ஒருங்கிணைந்த செயற்பாடு.
- தன்னார்வல விக்கிப்பீடியா சமூகத்தின் தாங்கு திறன்.
- விக்கிமீடியா அறக்கட்டளையின் நல்கை வழங்கு நெறிமுறைகள், அதற்கான கால அளவுகள்
- தமிழ் விக்கிப்பீடியாவின் தர உறுதி முறைமைகள்
- விக்கிப்பீடியாவின் ஐந்து தூண்கள் எனப்படும் அடிப்படைக் கொள்கைகளில் சமரசம் இன்மை

# நன்றி!

- ravidreams@wikimedia.in
- 9986 99 3336
- http://wiki.wikimedia.in/